பிரான்சு நாட்டின் ‘செவாலியே’ விருதுபெறும்

# கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 14–

கலை இயக்குநர் தோட்டாதரணி அவர்களுக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான ‘செவாலியே’ விருது அறிவிக்கப் பட்டிருப்பது குறித்து வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–



**ஆக்சுபோர்டில் ஒளிரும் தந்தை பெரியாரின் ஓவியத்தைத் தந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்திய தோட்டா தரணி அவர்களுக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான ‘செவாலியே’ விருது அறிவிக்கப்பட்டிருப்பது நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது!**

**அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்ற தோட்டா தரணி அவர்கள், இந்தியாவில் இருந்து இவ்விருது பெற்ற மிகப்பெரும் ஆளுமைகளின் வரிசையில் இணையவுள்ளது பெருமையளிக்கிறது. பார் போற்றும் உங்கள் சாதனைக்குப் பாராட்டுகள்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

SIR வாக்குத் திருட்டை எதிர்த்து

# திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் தலைமையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

திருவாரூர், நவ14.

ஒன்றிய பிஜேபி அரசின் குறுக்கு வழி ஆட்சிக்கு துணையாக தேர்தல் ஆணையத்தை தன் கைப் பாவையாக கொண்டு மோடி அரசு செயல்படுத்தும் SIR வாக்கு திருட்டை எதிர்த்து கழக தலைவர் தமிழ்நாடு முதலவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதல்களின்படி திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அவர்கள் தலைமையில், மாவட்ட துணை செயலாளர் எம். எஸ்.கார்த்திக் வரவேற்புரையாற்றினார். , நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் நன்றி கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர் கே. மாரிமுத்து, நாகை அ.அசோகன், அவைத்தலைவர் க. தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம். ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர்,மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன் , ஆர்.எஸ்.பாண்டியன், டி. செல்வம்,கணபதி,ஆடலரசன்,நகர்மன்ற தலைவர்கள் மான்னை த. சோழராஜன், கவிதா பாண்டியன்,நவாஸ் கான்(மும்தாஜ்) புவனப்ரியா செந்தில் ,பாத்திமா பஷீரா ,துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர்,

ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, வே.மனோகரன், சித்தேரி சிவா என்கிற சிவசுப்பிரமணியம், வீ.எஸ். ஆர்.தேவதாஸ், சேகர் கலியபெருமாள் , பா.பிரபாகரன், நா.கவியரசு, எஸ்.ஜோதிராமன், புலிவலம்.ஏ.தேவா, ப.பிரகாஷ், ஆனந்த் என்கிற அடைக்கலம், பால.ஞானவேல், ஐ. வி.குமரேசன், கேப்டன் செல் வராஜ், ஆர்.பாலச்சந்திரன், இரா.மனோ கரன், டி.எஸ்.டி முத்துவேல், வே.மனோகரன், நகர செயலாளர்கள் வீரா.கணேசன், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர்கள் பா.சிவநேசன், பக்கிரிசாமி, தியாகு, ஏ.கே.டி.சேரன், பூண்டி.கே. கலைவேந்தன்.

பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், செல்வ ஜெயதேவன், கலைவாணி மோகன், கமாலு தீன் மற்றும் பணங்குடி ஏ. எஸ். குமார், பா.அரவிந்த், பகலவன்,குன்னலூர் அன்பழகன், தேசபந்து, எம்.ஐ.ஆர். தாஜுதீன், ஷோபா கணேசன்,ராணி சேகர் , மீனாட்சி சூர்யா பிரகாஷ்,விமலா பாலு, எம்.என். ராஜா,ராஜ் என்கிற கருணாநிதி,புலவர் எண்கண்மணி, காட்டூர் சதீஷ்குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்

திராவிடர் கழகம்,இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள்,இந்தியா யூனியன் முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி,மதிமுக, மக்கள் நீதிமையம், எஸ்.டி.பி.ஐ. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள், பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கான கழக தோழர்கள் பங்கேற்றனர்.





அரியலூர் மாவட்டம் வாரணவாசியில் கேஸ் சிலிண்டர் லாரி வெடித்து விபத்து நடந்த இடத்திற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் விரைந்து சென்று பார்வையிட்டு விபத்து குறித்து காவல்துறையினரிடம் கேட்டறிந்து பாதுகாப்பு பணியை துரிதப்படுத்த அறிவுறுத்தினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (S.I.R.) செய்யும் பணியை

# பூத் வாரியாக BLA - 2, BDA, மற்றும் கழகத்தினர் இணைந்து வீடு வீடாகச் சென்று கண்காணிப்பீர்!

## காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம்,நவ.14–

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (S.I.R.) செய்யும் பணியை பூத் வாரியாக BLA – 2, BDA, மற்றும் கழகத்தினர் இணைந்து வீடு வீடாக சென்று கண்காணிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :–

தமிழ்நாட்டில் S.I.R. – வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் கடந்த 4–ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. அந்த வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும், அடங்கியுள்ள வாக்காளர்களுக்கு, வாக்குச்சாவடி அலுவலர் – B.L.O. வீடு வீடாகச் சென்று கணக்கீட்டுப் படிவத்தை வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிகளில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி அலுவலர் – B.L.O. வீடு வீடாகச் சென்று கணக்கீட்டுப் படிவத்தை வழங்கும் போது, அரசியல் கட்சிகளின் BLA – 2 உடன் சென்று ஒத்துழைப்பு தரலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ள படி,

தி.மு.க. சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ள நம்முடைய BLA – 2, உடன் சென்று ஒத்துழைப்பு தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் B.L.O – வாக்குச்சாவடி அலுவலரால் அடையாளம் கண்டறிய முடியாத வாக்காளர்களை கண்டறிவதற்கும் உதவி செய்து, உரிய வாக்காளர்களுக்கு அவர்களின் கணக்கீட்டு படிவத்தை வழங்குவதற்கு உதவிட வேண்டும்.

மேலும், 2025 – ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் கணக்கீட்டுப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும், உறுதி செய்ய வேண்டும்.

அந்தந்த வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்கள் வழங்கிய பின்னர், அந்தந்த வாக்குச்சாவடிகளின் BLA – 2 மற்றும் BDA ஆகியோர் ஒவ்வொரு வீடாகச் சென்று, வாக்காளர்கள் கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

மேலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்த பின்னர், அக்கணக்கீட்டுப் படிவங்கள் அந்தந்த B.L.O – வாக்குச்சாவடி அலுவலர் வசம் ஒப்படைத்திடுவதிற்கும் BLA – 2 உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்களர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை முறையாக பூர்த்தி செய்து B.L.O – வாக்குச்சாவடி அலுவலர் வசம் கண்டிப்பாக திருப்பி தந்தால் தான் அந்தந்த வாக்காளர்களின் பெயரும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர் பெயரும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெரும் என்பதை கழகத்தினர் அனைவரும் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1.1.2026 அன்று 18 வயது நிரம்பியவர்களையும், 2025 வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்களையும் BLA – 2 கண்டரிந்து, அவர்களுக்கு வாக்காளர் சேர்க்கும் படிவம் 6–யை பெற்றுத் தந்து, புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்றும் மேலும், கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.


# 28 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் - உமை விட்டு!



தோற்றம்: 11–05–1937 மறைவு: 14–11–1997

**திரு. என். வி. என். சோமு**

முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை
இணை அமைச்சர்

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்

**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு**

M.B.B.S. M.S. (OBST. & GYNAC.)

மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தி தொடர்பாளர், தி.மு.க.